

# பரலோக பொக்கிஷங்கள்

மேலானவைகளையே நாடுங்கள்! (கொலோசெயர் 3:2)



ஆண்டவர் இயேசுவே, நீர் வழங்கும் சுதந்திரம் எமதாகட்டும்! பல்வேறு சோகத்தால் 'உடைந்துபோன இருதயங்கள்' குணமடையட்டும்! பாவத்தால் அடிமையான உமது மக்களின் 'அடிமை விலங்கு' முறிந்து வீழட்டும்! எம் இரட்சகரை கண்கள் காணட்டும்! சிறைவாசம் நீங்கி,

விடுதலை! விடுதலை! என,

130-கோடி உமது இந்திய மக்கள் சுவிசேஷத்தால் சுபிட்சம் பெறட்டும்! (லூக்கா 4:18ab).

விண்ணரசே வருக! பாரத தேசத்தை ஆளுக!

*-tr*

பெட்டகம் 40 **செப்டம்பர்** பரல்கள் 9

**2024**



## ஸ்தல சபையில் 'பிரிவினை அந்தகாரம்' கூடாது!

"சகோதரனே, இந்த சபையில் குறையுண்டு" என கூறும் உங்களுக்கு ஓர் இரகசியத்தைச் சொல்ல விரும்புகிறேன்: இந்த உலகில் குறைவற்ற சபை போதகன், முழுமையான இறை ஊழியம் அல்லது ஒரு பிழையும் இல்லாத திருச்சபை என்று சொல்லக்கூடிய தரம் எங்குமே இல்லை!

ஆகவே, 'ஒரு குரங்கைப்போல' மரம் விட்டு மரம் தாவி உங்கள் சபை ஜீவியத்தை வீணாக்க வேண்டாம். நீங்கள் இருக்கிற இடத்தில் நிலைத்திருங்கள்! தேவன் உங்களிடம் செய்யத் சொல்வதைச் செய்யுங்கள்! உங்களது உடன் சகோதர சகோதரிகளிடம் 'மாயமற்ற' அன்பு பாராட்டுங்கள்! உங்கள் ஸ்தல சபையின் தலைவர்களுக்கு கீழ்ப்படிந்திருங்கள்! அதாவது, ஆவிக்குரிய தலைவர்களுக்கு 'கர்த்தருக்குள்' அடங்கியிருங்கள்! உலர்ந்த எலும்புகள் தேவனுடைய ஆவியைப் பெற்றதும் ஒரு மகா பெரிய சேனையாக எழும்பி நிற்கும் என்பது தேவ வாக்கு! (எசே.37:10).

ஆகவே, பிரிவினையைத் தூண்டும் அந்தகார சக்திகள் அனைத்துக்கும் எதிராக ஒன்றுசேர்ந்து எழுந்து நில்லுங்கள்! நீங்கள் அப்படியிருந்தால், பாதாளத்தின் வாசல்களும் உங்கள் ஸ்தல சபையை, ஒருக்காலும் மேற்கொள்ள மாட்டாது!

*-Ed*


சுவிசேஷ செய்திகளின் புதிய You Tube சேனல்: **gospelforall**

இந்த புதிய You Tube சேனலை அநேகருக்கு அறிமுகப்படுத்துங்கள்

(வாரந்தோறும் செவ்வாய்கிழமை மாலை 7.00 மணிக்கு ஒளிபரப்பாகும். சுவிசேஷ செய்திகளை குடும்பமாய் பாருங்கள்)



**பரலோக பொக்கிஷங்கள் – மாதாந்திர பத்திரிக்கை**

ஆவிக்குரிய விழிப்பூட்டும்! அனல் குன்றா வழிகாட்டும்! அசல் உயர்த்தி போலி அகற்றும்!
சமரசம் மறுத்து சத்தியம் பேசும்! குருவின் அடிச்சுவடில் சீஷர்களை எழுப்பும்!

வங்கி கணக்கு: MADURAI CHRISTIAN FELLOWSHIP, Indian Bank - Koodal Nagar Branch
A/c No: **502087685** IFSC Code: IDIB000K150
(பின்பக்கம் உள்ள **QR** கோடு மூலமும் அனுப்பலாம்)
(வங்கியில் செலுத்தியபின், உங்கள் விலாசம் மற்றும் தகவல் தெரிவிக்கவும்)



கடித தொடர்பு : பரலோக பொக்கிஷங்கள் 207A- Jaheer Husain Street, Koodal Nagar, (Thathaneri P.O.) Madurai - 625018,S.India Cell : 98430 49935 Ph (O) 0452 - 3585200
Email: rathnakumar.t@gmail.com தமிழ் வலைதளம்: paralogapokkishangal.com
You Tube : (for Spiritual messages) paralogapokkishangal
You Tube : (for Gospel messages) gospelforall

## ‘வாக்குதத்த பூமியில்’ கால் பதித்தவர்கள் பாக்கியவான்கள்!

*கர்த்தர் உரைத்த வாக்குதத்தம், என் சுதந்திரம்*

*ஓர் மிகப் பிரதான வாக்குதத்தத்தை கர்த்தர் யோசுவாவுக்கு கொடுத்தார்: “உங்கள் காலடி மிதிக்கும் எவ்விடத்தையும் உங்களுக்குக் கொடுத்தேன்” என்பதே அந்த அருமையான வாக்குதத்தம் (யோசுவா 1:3). எழுத்தின்படி, உலக வரைபடத்தில் கிறிஸ்துவுக்கென்று ஆதாயப்படுத்தப்படாத தேசங்கள் இன்னமும் இருக்கின்றன. அதுபோலவே, நாம் இன்னமும் சுதந்தரிக்காத, நம்முடைய கால்கள் பதித்திடாத “**திவ்ய வாக்குதத்தங்களும்**” நமக்கு இருக்கிறதல்லவா? தேவன் யோசுவாவுக்கு கொடுத்த அந்த வாக்கு என்ன? “உங்கள் காலடி மிதிக்கும் எவ்விடத்தையும் உங்களுக்கு கொடுப்பேன்” என்பதல்லவா! பின்பு, அந்த வாக்குதத்த பூமியின் வரைபடத்தையும் அவர்களுக்கு கொடுத்தார்!*

> “ **ஆகிலும், அவைகளை சுதந்தரிப்பதற்கு ஒரே ஒரு நிபந்தனை முன்வைத்தார். அதுஎன்னவெனில், வாக்குதத்த பூமியின் நீளத்தையும், அகலத்தையும் சுதந்தரிக்கும்படி நீங்கள் நடந்து கடக்க வேண்டும். அவ்வாறு சுதந்தரித்த பகுதிகள் அனைத்தையும், அதன் அளவை உங்கள் பாதங்களால் அளக்க வேண்டும் என்றே நிபந்தனை வைத்தார்.**

*அவர்களோ, மூன்றில் ஒரு பாக ஆஸ்தியை மாத்திரமே நடந்து அளந்தார்கள். அவர்கள் நடந்த, அந்த ஒரு பாகத்திற்கு மேலாக அவர்களுக்கு கிடைக்கவில்லை. ஆனால் 2பேதுரு நிருபத்தின் மூலமாக நாம் பெற்றிருக்கும் நற்செய்தி என்னவென்றால் “அந்த வாக்குதத்த பூமி” நமக்காக இன்னமும் திறந்தே இருக்கிறது. இப்போது நாம் கீழ்படிதலோடு கூடிய* **விசுவாச கால் கொண்டு, முன்னேறிச் சென்று** *வாக்குதத்தங்களை நமக்கென உரிமையாக்கிக்கொள்ள வேண்டும் என்பதே தேவனுடைய சித்தமாயிருக்கிறது.*

*இவ்வாறாக, ‘தேவனுடைய வாக்குதத்தங்களை’ கிறிஸ்துவின் நாமத்தில் நம்மில் எத்தனை பேர் சுதந்தரித்து உரிமையாக்கிக்*

கொண்டோம்? எனவே நாம் விசுவாச வீறுகொண்டு முன்னேறி நகர்ந்து, சுதந்தரித்துக் கொள்ள வேண்டிய "**உன்னத பிரதேசம்**" நமக்கு உண்டு என்பதை அறிந்துகொள்வோமாக! இப்போது நீங்கள் செய்ய வேண்டியதெல்லாம், உங்கள் விசுவாச கால்களை திடப்படுத்தி, பரந்து நிற்கும் வாக்குத்தத்த பூமியின் நீளத்தையும் அகலத்தையும் உறுதிபட நடந்து சுதந்தரிப்போமாக!

இனிமுதற்கொண்டு விழிப்புள்ளவர்களாய், நமக்கு வழங்கப்பட்ட பிறப்புரிமைக்குள் பிரவேசித்து சுதந்தரிப்போமாக. அவ்வாறு பிரவேசித்த நீங்கள், உங்கள் கண்களை ஏறெடுத்து வடக்கிலும் தெற்கிலும், கிழக்கிலும் மேற்கிலும் ஆகிய நாலா திசையிலும் சுற்றிப் பாருங்கள்! அப்போது, நம் யாவர் காதுகளிலும் கர்த்தர் பேசும் மெல்லிய தொனி என்னவென்றால் "நீ பார்க்கிற அனைத்து பூமியும் உனக்கே தருவேன்" என்பதுதான்.

சுமார் 100 வருடங்களுக்கு முன்பான "காலனி குடியிருப்பு நாட்களில்" முன்னோடியாய் நின்று பணியாற்றிய 'மார்க்கஸ் சாலிஸ் பரி' அவர்கள் காண்பித்த குடியிருப்பு பகுதிகள் அரசு பதிவில் இல்லையென, மக்கள் மாமன்றத்தில் விவாதிக்கப்பட்டது. அதற்கு சாலிஸ்பரி "**கனவான்களே உங்கள் வரைபடத்தை பெரிதாக்குங்கள்**" அப்போது எங்கள் குடியிருப்பு உள்ளே வந்துவிடும்! என மிக தைரியமாய் பேசி சாதித்தார்.

ஆம், யூதா எங்கெல்லாம் கால் பதித்தானோ அந்த பூமி அனைத்தும் அவனுக்கு சொந்தமாகும் என்றும், அதுபோலவே பென்யமீன் எங்கெல்லாம் கால் பதித்தானோ, அந்த பூமியும் அவனுக்கு சொந்தமாக வேண்டும்! இவ்வாறு அவரவர் தங்கள் கால்களை பதித்து சுதந்தரமாக்கிக்கொள்ள வேண்டும். அவ்வாறு கால் பதித்த நீங்கள் 'இந்த வாக்குத்தத்த பூமி' எங்களுக்குச் சொந்தம் என அறிக்கை செய்வது பேரானந்தம் தரும் சுதந்தரம் அல்லவா?

*தேவ கிருபையை பல்லாண்டு காலமாய் ருசித்து வாழ்ந்த ஓர் தானியேல் என்ற வயது முதிர்ந்த சகோதரனிடம்: "தானியேல் சகோதரா, உங்கள் கிறிஸ்தவ ஜீவியத்தில் இவ்வளவு சமாதானம் சந்தோஷம் எப்படி பெருகியது?" என கேட்டார்கள். அதற்கு அவர்: "எப்போதெல்லாம் விலையேறப்பெற்ற தேவனுடைய வாக்குத்தத்தங்கள் என்னை கிட்டிச் சேருகிறதோ, அப்போதெல்லாம் முகங்குப்புற தரையில் விழுந்து 'இந்த வாக்குத்தத்தங்கள்' எனக்கே சொந்தம்! என அர்ப்பணித்து அறிக்கை செய்கின்றபடியால் தேவ வாக்குத்தத்தங்கள் அனைத்தும் என் சொந்தமாய் மாறிவிட்ட*

*மகிமையை கண்டேன். நீங்கள் என்னிடத்தில் காணும் சமாதானத்தின் பூரிப்பிற்கும், எனக்கு சுதந்தரமாகிவிட்ட திவ்ய சுபாவத்திற்கும் அதுவே காரணம்! என அகமகிழ்ந்து கூறி, தன்னை சுற்றி நின்றவர்களுக்கு விசுவாச ஊக்கமளித்தார்.*

இவ்வாறாகவே தேவனுடைய விலையேறப்பெற்ற வாக்குத் தத்தங்களின் மேல் முழு விசுவாசத்தோடு தங்களை அர்ப்பணிக்கும் எல்லா பரிசுத்தவான்களுக்கும் இந்த உரிமை சொந்தமானது! அல்லேலூயா!

*- Mrs.சார்லஸ் கஃவ்மென்*

---

## வேதத்தை 'விசால வழி' நடத்துவோரை தேவன் அனுமதிப்பது ஏன்?

*'இவர் யார்?' என அடையாளப்படுத்தவே, வேத புரட்டு அனுமதிக்கிறார்*

"மற்றவர்களைக் குற்றவாளிகளென்று தீர்க்காதிருங்கள்!" என வேதவாக்கியம், இயேசுவின் கூற்றாக நமக்கு அறிவிக்கின்றது (லூக்கா9:27). ஆனால்....

"**நீதியின்படி தீர்ப்பு செய்யுங்கள்!....**" எனவும் வேதவாக்கியம், இயேசுவின் கூற்றாகவே கூறுகின்றதே!(யோவான்7:24). அப்படியானால் எது சத்தியம்? முதல் வாசகமா.... அல்லது இரண்டாவது வாசகமா? இரண்டும் இயேசு கூறியதுதானே?

"**ஆம், கிறிஸ்தவ விசுவாசியாய் இருந்து கொண்டே, இன்னமும் சுய சித்தத்தைச் செய்திட ஒருவன் விரும்பினால், அவன் விருப்பப்படியே அதைச் செய்வதற்கு "வழிவகுத்தே" வேதவாக்கியங்கள் எழுதப்பட்டுள்ளன.**

இவ்வாறு தன் சுயசித்தத்தைப் பூர்த்திசெய்யும் ஒருவன், தன் செயலை நியாயப்படுத்தும்படி, வேதவாக்கியங்களில் ஏதாகிலும் ஓர் வசனத்தைப் பற்றிகொள்வதற்கு சத்தியவேதம் அவன் திறந்த வாசல் சென்றிட அனுமதி அளிக்கின்றது.

இவ்விதமாய் சத்தியத்தை விட்டு விலகிச் செல்லும் ஏராளமான ஜனங்களை நாம் கண்டிருக்கிறோமல்லவா! பாதை மாறி சீரழியும் இவர்கள், தங்கள் பாதை சரிதான் என சாதிக்க "வேத வசனத்தையே" கோடிட்டுக் காட்டுவது மிகுந்த வேதனை! ஏனெனில், இவர்களைப் பார்த்து, அனேகர் சத்தியத்தின் இடுக்கமான வாசலை இழந்து, அழிவின் விசாலத்தில்பிரவேசித்து விடுகிறார்கள்! இவ்வாறு வேதவாக்கியங்களை, பகிரங்கமாகவே ஒன்றுக்கொன்று முரணாயிருப்பதுபோல் தேவன்

எழுத அனுமதித்திருப்பது, அவருடைய சம்பூர்ண ஞானமேயாகும்!

“

**எப்படியெனில், இப்போது அவனவன் தான் விரும்பியதை மிக இலகுவாக செய்கிறபடியால், “உண்மையில், தேவனுடைய பார்வையில் இவன் யார்?” என்பதை இப்போது அவனே தன்னை அம்பலப்படுத்துகின்றான்!**

இவ்விதம் நீங்கள் எண்ணிப்பாருங்கள். யாரோ ஒருவர் “ஓர் குறிப்பிட்ட விஷயத்தைக்” குறித்து வேத வாக்கியம் போதிக்கும் சத்தியத்திற்கு முழு இருதயமாய் கீழ்ப்படிய விரும்பவில்லை. ஆனால் அதே சமயம், இந்த நபர் “வேத புத்தகம்! எனக்கேற்ற புத்தகம்!!” எனவும் புகழ்பாட விரும்புகிறார்.

*இந்நிலையில் வேத வாக்கியம் “அக்குறிப்பிட்ட விஷயத்தைக்” குறித்து கொஞ்சமும் மாறுபாடு கொள்ள முடியாதபடி தெள்ளத்தெளிவாக எழுதப்பட்டிருந்தால், என்ன சம்பவிக்கும்? நாம் மேற்கண்ட நபர், தான் விரும்பியதைச் செய்வதற்கு வழியேதும் இல்லாமல் திணறி விடுவார்! இப்போது, தான் விரும்பாத ஒன்றை வலுக்கட்டாயமாய் செய்யும்படியான நிர்ப்பந்தத்திற்குள்ளாகி விட்டார்!! காரியம் இவ்வாறு நடைபெற்றுவிட்டால், **“இந்த நபர் உண்மையில் எப்படிப்பட்டவர்?”** என்பதை தேவனும், தேவனை சார்ந்தவர்களும் அறிந்து, அதுபோன்ற “வேஷதாரிகளுக்கு” விலகி நிற்பார்கள்.*

எனவேதான் “நேர்மையற்ற மனுஷர்கள்” ரொம்பவும் லேசாக தங்கள் சொந்த வழியைத் தெரிந்துகொள்ளும் விதத்தில், பகிரங்கமாய் மாறுபாடு காணும்படிக்கு வேதவாக்கியங்களை தேவனே எழுதிவைத்துள்ளார். இப்போது, “அந்த நபர்” ஏற்கனவே செய்யும்படி திட்டம்தீட்டி வைத்திருக்கும் செயலுக்கு ஆதாரமாய் வேத வார்த்தையைத் தேடுவார்.... தான் தேடிய வசனத்தையும் மிக எளிதில் கண்டுபிடித்து விடுவார்!!

“

**தன் ஆசையைத் தீர்க்கும்படி “ஒத்த தாளம் போடும்” ஓர் வசனத்தை கண்டுபிடித்துவிட்ட இந்த நபர், “இவ்விஷயத்தைக்” குறித்து வேதம் இன்னமும் என்ன கூறுகிறது? என்பதை அறிந்துகொள்ள கொஞ்சம்கூட அக்கறை கொள்ளவே மாட்டார்!!**

தானே தெரிந்துகொண்ட வழிக்கு ஆதாரமாயிருந்த அந்த வசனத்தை அவர் குஷியாகப் பின்பற்றி, தன் ஜீவியத்தை “ஆவிக்குரிய மரண வாசனையோடு” அனுபவித்துக் கழிப்பார்! இவ்விதமாகவே,

“எழுத்து கொல்லும்!” (2கொரி.3: 6) என்ற வேதவாக்கியம், மானிடருக்குள் நிறைவேறுகின்றது.... ஆ, இது துயரம்!

இவ்வாறாகத்தான், இன்று உலகில் காணும் பல்வேறு “துர் உபதேசங்களைப்” பற்றிக்கொண்டிருக்கும் ஒவ்வொருவரும், வேத வசனத்தையே ஆதாரமாகச் சுட்டிக்காட்டுகிறார்கள். “தாங்கள் பற்றிக்கொண்டிருக்கும் துர்உபதேசம் சரிதான்!” என அவர்கள் எண்ணும்படி தேவனும் அவர்களுக்கு அனுமதி தந்துவிட்டார்!

இதற்கு மாறாக, தெய்வபயம் நிறைந்த ஓர் நபரை சற்று எண்ணிப்பாருங்கள். நாம் மேற்கண்ட நபர் எந்த “குறிப்பிட்ட விஷயத்திற்காக” வேத வசனத்தின் நடத்துதலைத் தேடினாரோ, அந்த “விஷயத்திற்காகவே” இவரும் வேத வசனத்தின் நடத்துதலுக்காக வாஞ்சை கொண்டிருக்கிறார்! ஆனால்....

“ **இந்த இரண்டாம் நபரோ, தான் தேவசித்தம் மட்டுமே செய்திட வேண்டும் என்பதற்காகத் தன் சுயசித்தத்தையும் - தன் சுய வழியையும் உதறிவிட ஆயத்தமாய் இருப்பார்!**

இதனிமித்தம், இந்த இரண்டாம் நபர், மேற்கண்ட முதல் நபர் எடுத்த முடிவிற்கு முற்றிலும் வேறுபட்ட முடிவை எடுத்திருப்பார் என்பதில் சற்றும் ஐயமேயில்லை! ஏன் தெரியுமா? ஆம், இந்த இரண்டாம் நபர், தன்னுடைய செயலுக்கு **வேத வாக்கியத்தின் முழு சாட்சியையும்** தேடினார், அவ்வளவுதான்!!

காரியம் இவ்வாறிருப்பதால், நாம் தேவசித்தத்தை அறிந்து கொள்ள சரியான வழி யாது? எந்த விஷயமானாலும், நாம் **வேத வாக்கியத்தின் முழு போதனையையும்** வாஞ்சித்துத் தேடுவதே சரியான வழியாகும்!

இச்செய்தியின் துவக்கத்தில் நாம் உதாரணத்திற்காக இரண்டிரண்டு வசனங்களாகக் குறிப்பிட்டு, எது சத்தியம்? என கேள்வி கேட்டிருந்தோம். அதற்கு விடை யாதெனில், இரு வசனங்களையும் ஒன்றாய் சேர்த்து காண்பதே சத்தியமாகும். ஒன்றை மற்றொன்றோடு தெய்வ பயத்தோடும், பரிசுத்த ஆவி வெளிச்சத்தின் துணையோடும் கவனமாய் சேர்த்து.... இணைத்துப் பாருங்கள்! அப்போது, தேவனுடைய சம்பூர்ண ஞானம் என்ன என்பதைக் கண்டுகொள்வீர்கள்! அதோடு நின்றுவிடாமல், அந்த வேத ஞானத்திற்கு நீங்கள் கீழ்படிந்துவிட்டால்.... என்னே நம் ஆனந்தம்! நம் வாழ்வில் நிச்சயமாய் பெருமகிழ்ச்சி அலைபாய்ந்து புரண்டோடிச் செல்லும்!!

- எலியாஸ் அஸ்லாக்சன்

## அவர் சமூகத்தில் வாழ்பவன், எப்படி பாவம் செய்வான்?

*'தெய்வ உறவே' ஜெய வாழ்க்கை*

*கிறிஸ்து நமது ஞானக் களஞ்சியம்! 'அவரை அறியும்படி' நாம் அவரிடம் கற்றுக்கொள்ள வேண்டுமென்று விரும்புகிறார். 'நீங்கள் உங்கள் முழு இருதயத்தோடு என்னைத் தேடுவீர்களானால் தேடும்போதே என்னைக் காண்பீர்கள்' என்றும், 'தேடுகிறவன் எவனும் கண்டடைகிறான்' என்றும் சொல்லுகிறார். நிர்விசாரிகளுக்கும் சோம்பேறிகளுக்கும் கிறிஸ்து தம்மை வெளிப்படுத்துவதில்லை.*

**"அவரை அறியும்படியான வாஞ்சை அநேகருக்கு இல்லாததினாலேதான், அவர்கள் 'கேள்வி ஞான' அறிவுக்காரராய் இருக்கிறார்களேயன்றி, ஜீவியத்தை மாற்றி ஆசீர்வதிக்கக்கூடிய அனுபவ அறிவு அவர்களுக்கு இல்லை!**

*ஒரு மனுஷனை, வேளாவேளை காண்பதினால் அவனை அறியமுடியாது. அவனோடு நெருங்கிப் பழகினால் மாத்திரமே அவனை அறியமுடியும்! பொது ஆராதனைகள், ஜெபக்கூட்டங்கள், வேதவாசிப்புக் கூட்டங்கள் நல்லது. ஆனால் கூட்டத்தில் அல்ல; ஆண்டவரைத் தனித்துச் சந்தித்து, அவரோடு சம்பாஷிப்பவர்களே அவரை அறிவார்கள். அன்பர் இருவருடைய கனிவான சம்பாஷணைக்கு, மூன்றவாவது ஆள் ஒரு தடை! கிறிஸ்துவை அறியும் அறிவில் வளர்ந்தவர்கள் எல்லோரும் அவரோடு அதிகமான நேரம் தனித்திருந்தவர்களே, என்பதை அறியுங்கள்!*

*"இந்த வீட்டுக்குக் கிறிஸ்துவே தலைவர், போஜன வேளையில் அந்தரங்க விருந்தாளி, பேசும் ஒவ்வொரு சம்பாஷணையையும் இரகசியமாய் கவனிப்பவர்" என்றெழுதப்பட்ட வாசகம் சுவரில் கண்ணுக்கெதிரில் தொங்கினாலும், வீட்டிலுள்ளவர்கள் காரியங்களெல்லாம் அதற்கு முற்றிலும் விரோதமாயிருக்கிறதில்லையா? காரணமென்ன?*

*தேவ சமூகத்தைப் பற்றிய அறிவு நம்மைப் பாவஞ்செய்யாமற் காக்கவேண்டுமானால், அது அனுபவத்திற்கு வரவேண்டும்! கிறிஸ்துநாதர் ஏதோ ஒரு காலத்தில் ஜீவித்தார் என்கிற நினைவல்ல; 'இப்பொழுது கூடயிருக்கிறவராகக்' கண்டு ஜீவிக்க வேண்டும்.* **இல்லாதவரை இருக்கிறவராகப் பாவித்து நடக்கிறதல்ல; இருக்கிறவரையே இருக்கிறதாக உணர்ந்து ஜீவிக்க வேண்டும்.** *சிநேகிதர் ஒருவரையொருவர் பார்த்து, ஒருவரோடொருவர் பேசி ஒன்றாய்*

ஜீவிக்கிற வண்ணமாய் நம்முடைய அருமை ரட்சகர் நம்மோடிருப்பது அவ்வளவு பிரத்தியட்சமாக வேண்டும்! நாம் உட்காரும்போது அவரோடு உட்கார்ந்து, எழுந்திருக்கும்போது அவரோடு கூட எழுந்து, நடக்கும்போது அவரோடுகூட நடந்து, வேலையில் சேர்ந்து வேலைசெய்து, படுக்கும்போது அவர் பாதுகாப்பில் படுத்து, விழிக்கும்போது அவர் திருமுகத்தைச் சந்தோஷத்தோடு தரிசித்து இவ்விதமாய் **இடைவிடாமல் அவரோடு தங்கி வாழ** கற்றுக்கொள்ள வேண்டும்! இதை அப்படியே அப்பியாசிக்கும்போதுதான், அனுபவமாகும்!

அவர் நம்மோடிருப்பது மெய்யானால் நம்முடைய காரியங்களை அவருக்கு மறைக்கமாட்டோம். நம்முடைய துக்கத்தை முந்தி **அவருக்குச் சொல்லாமல், வேறே யாரிடம் சொல்லுவோம்?** நம்முடைய சந்தோஷத்தை அவருக்குத் தெரிவிக்கமாலிருப்போமா? நம்மை மேற்கொள்ளும் பாவத்தைப் பற்றி அவரோடு பேசாதிருப்போமா? நம்முடைய தீர்மானங்களை அவருக்கு வெளியிடாதிருப்போமா? நாம் எழுதும் கடிதங்களை அவர் வாசிக்காமலும், நமக்கு வரும் கடிதங்களை அவர் பார்க்காமலும் இருப்பதெப்படி?

> “ சாப்பிட ஆகாரமில்லையோ, செலவுக்குப் பணமில்லையோ, உடுத்திக்கொள்ள வஸ்திரமில்லையோ? என, எப்பொழுதும் கூடயிருக்கிற ஆண்டவரிடத்தில், இவைகளைப் பற்றிப் பேசாதிருக்க முடியுமா?

ஏன் துக்கமாயிருக்கிறாயென்று அவர் கேட்கும்போது, வாயை மூடிக்கொண்டு சும்மாயிருப்பதெப்படி? அவரைப்போல் நம்மை விசாரிக்கக்கூடியது யார்?

*சகோதரரே, இப்படி அவர் நம்முடைய சந்தோஷத்திலும் துக்கத்திலும், வேலையிலும் ஒய்விலும், இரவும் பகலும் கூடியிருப்பதுண்டானால் நாம் எப்படிப் பாவஞ்செய்யத் துணிவோம்? அவருடைய இன்ப சமூகம் நம்முடைய உள்ளத்தைப் பரவசப்படுத்துகையில் கோபத்துக்கும், மூர்க்கத்துக்கும், வீண்பேச்சுக்கும், மற்றெந்த அசுத்தத்திற்கும் இடமிருக்கமாட்டாது. தேவ பக்தனெனப் பேரெடுத்த பிரதர் லாரென்ஸ் என்பவர் தேவனோடு ஜீவிப்பதில் சிறந்து விளங்கினவர்! அநேக பரிசுத்தவான்களிடத்தில் காணப்படும் தூய்மைக்கும் மனத்தாழ்மைக்கும் ரகசியம், அவர்கள் கிறிஸ்து நாதரோடு நெருங்கி ஜீவித்த, ஜீவியமேயாகும்! அல்லேலூயா.*

- பரமானந்தம் ஐயர்

## தீப்பிளம்பான அர்ப்பணத்திற்கு குறைவாக கிறிஸ்தவம் இல்லை!

*"கிறிஸ்து எனக்கு ஜீவன்" சாவு எனக்கு ஆதாயம்*

ஒருமுறை, பிரஸ்பைடேரியன் சபை போதகர் தனக்கு வந்த ஒரு இளம் கம்யூனிஸவாதியின் கடிதத்தை பில்லிகிரஹமாகிய என்னிடம் காட்டினார்! அது, தனக்கு நியமனம் செய்யப்பட்ட பெண்ணின் நிச்சயத்தை புறக்கணிக்கும் கடிதமாயும்.... அதேசமயம், கம்யூனிஸ சவால் நிறைந்ததாயும் இருந்தது:

"என் திருமண நிச்சயத்தை மறுப்பதற்கு பல காரணங்கள் உண்டு! நம் தேசத்தில் கம்யூனிஸர்களாகிய எங்கள் மரணமே அதிகம்! நாங்கள் சுட்டு கொல்லப்படுகிறோம்.... தூக்கிலிடப்படுகிறோம்.... எரிக்கப் படுகிறோம்.... அவயவம் துண்டிக்கப்படுகிறோம்.... தீது பேசப்படு கிறோம்.... அற்பமாய் இழிசெய்யப்படுகிறோம்.... வேலையிலிருந்து தூக்கி எறியப்படுகிறோம்.... கொஞ்சம் குறைய, யாதொரு சுக வாழ்வும் எங்களுக்கு இல்லை! நாங்கள் தரித்திர வாழ்வு வாழ்கிறோம்.... எப்படி யெனில், எங்கள் சம்பாதியத்தில் மிக அத்தியாவசியமான தேவையை மாத்திரமே வைத்துக் கொண்டு. மீதி உள்ள ஒவ்வொரு பைசாவையும் எங்கள் கம்யூனிஸ கட்சிக்கே அனுப்பி வைக்கிறோம்! உல்லாசத்திற்கும், சொகுசிற்கும் எங்களுக்குப் பணமும் இல்லை, நேரமும் இல்லை! எங்களைப் பைத்தியம் என அழைக்கிறார்கள்.... ஆம், எங்கள் முழு வாழ்வும், "உலகை கம்யூனிஸமாய் மாற்ற வேண்டும்!" என்ற எங்கள் கொள்கை அர்ப்பணத்திற்கு கிடைத்த பட்டப் பெயர் பைத்தியம்தான்!!

> "
> **நாங்கள் கொண்டிருக்கும் கம்யூனிச கொள்கையை, எத்தனை பணம் கொடுத்தாலும் பெற்றிட இயலாது! எங்கள் வாழ்வில் திட்டமான நோக்கம் உண்டு! எங்களுக்குள் எழும்பும் அற்ப 'சுய எண்ணங்களை' அல்லது 'இணக்கமற்ற பிரிவினைக்குரிய சுய-பெருமைகளை' எங்கள் கட்சியின் வளர்ச்சிக்கும், சமுதாய முன்னேற்றத்திற்கும் முன்பாக அடிபணிய வைக்கிறோம்!**

என் வாழ்வும் மூச்சும் கம்யூனிச கொள்கைதான்! இதுவே, என் மார்க்கம்! இதுவே என் களியாட்டு! இதுவே என் பிரியம்! இதுவே என் மனைவி! இதுவே என் எஜமான்! என் ஊணும் உறக்கமும் இதுவேதான்! **என் பகற்காலத்தில் இதற்காகவே நான் பாடுபட்டு, இரவில் இதையே என் கனவாய் கொண்டிருக்கிறேன்! காலப்போக்கில் இது எனக்குள் வளர்கிறதே அல்லாமல் காலப்போக்கில், இது என்னில் குறைந்துபோகும் கதி இல்லவே இல்லை!** நண்பர்கள் குழாமை என் மீது சுமந்திட மாட்டேன்!

*எனக்கு எவ்வித காதல் விவகாரமும் இல்லை! என்னை உந்திச் செல்லும் இந்த கொள்கை வேகத்திற்கு உதவிடாத எந்த உரையாடலையும் நான் மறுக்கிறேன்! என் நெஞ்சுறுதியான கொள்கை பிடிப்பிற்காக நான் ஏற்கனவே "சிறைச்சாலை" சென்றவன்! தேவையானால், துப்பாக்கி சூட்டிற்கும் என் நெஞ்சம் தயாராயிருக்கிறது!!"*

*இந்தக் கடிதத்தை வாசித்து முடித்ததும், பில்லிகிரஹாம் அவர்கள், கூடியிருந்த மக்களைப் பார்த்து கேட்டார்!* "**இந்த கம்யூனிஸ வாலிபன் கொண்ட அதே அர்ப்பணத்தை** *நீங்கள் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவிடம் கொண்டிருக்கிறீர்களா?*

*இந்த அர்ப்பணத்திற்கு ஒரு சதவீதம் குறைவாயும் இயேசு விரும்புவாரோ? தன்னைப் பின்பற்றி வந்தவர்களிடம், சற்றேனும் குறைவான அர்ப்பணத்தைக் கேட்டதாக 'ஒரு வசனமாவது' உங்களால் காட்டிட முடியுமோ? இன்னும் கூறப்போனால், 'மாயைக்கு' அர்ப்பணம் செய்த ஒரு கம்யூனிஸ வாலிபனின் அர்ப்பணத்தைக் காட்டிலும், 'நித்திய ஜீவாதிபதிக்கு' நாம் வைத்திடும் அர்ப்பணம் மிக உயர்ந்ததாய் இருக்க வேண்டும்!" என உரத்த சத்தமாய் சவாலிட்டு ஜனங்களை அழைத்தார்!*

*- பண்டிதர் பில்லிகிரஹாம் USA*

---

## 'உணர்த்தும்' மனசாட்சி இல்லையேல், இருதயம் இருளாகும்!

*சுத்த மனசாட்சி, ஓர் பரலோகம்*

*தனது 80-வயதைத் தாண்டிய தேவ மனிதர் ஒருமுறை இவ்விதமாக சொன்னார்: "நான் தினமும் இரண்டு கழுகுகளை சாந்தப்படுத்தி அமர்த்த வேண்டும்! இரண்டு முயல்களை எங்கும் ஓடிப் போய் விடாதவாறு கருத்தோடு பார்த்துக் கொள்ள வேண்டும்! இரண்டு பருந்துகளை சமாளித்தாக வேண்டும்! ஒரு நாகபாம்பை ஜாக்கிரதையாக அடக்கி வைக்க வேண்டும்! ஒரு சிங்கத்தை சங்கிலியால் கட்டி வைக்க வேண்டும்!" என்றார்.*

*"நீங்கள் வேடிக்கைக்காக இப்படிச் சொல்லுகின்றீர்களா?" என கேட்டார் அவரது நண்பன்.*

*" நான் தமாஷாக இதைச் சொல்லவில்லை, இது உண்மை!" என்று அந்த தேவ மனிதர் பதிலளித்தார்.*

*முதிய ஊழியர் சொன்ன அந்த* **இரண்டு கழுகுகளும்** *அவரது இரண்டு கண்களாகும்! அவற்றை அவர் மிகவும் விழிப்போடு என் இந்த வயதிலும் பாதுகாக்க வேண்டும். இல்லையேல், அவைகள் 'கிருபை*

இழந்து' தீமைக்கு நேராக அவரை வழி நடத்திச் சென்று விடும்.

அவர் சொன்ன அந்த **இரண்டு முயல்களும்** அவரது இரண்டு கால்களாகும்! அந்த கால்களை அவர் நல்ல விதமாக பிடித்து வைத்திருக்க வேண்டும். அப்படி இல்லையெனில், அவைகள் 'கர்த்தர் நடத்தாத' ஏதாவது தீய இடத்திற்கு நேராக, தனது பொடி நடையை துரிதமாக கட்டி விடும்.

அவர் குறிப்பிட்ட அந்த **இரண்டு பருந்துகள்** என்பது அவரது இரு கரங்களைக் குறிப்பதாகும்! அதை அவர், நல்ல காரியங்களை மாத்திரமே செய்திட பயிற்றுவித்தல் அவசியமாகும்.

அவர் சொன்ன **அந்த நாகபாம்பு** என்பது அவருடைய பொல்லாத நாவாகும்! அதை அவர் கடிவாள கயிற்றால் இறுகக் கட்டி வைக்க வேண்டும். இல்லையெனில், தன் 'விஷத்தால்' அனேகரை மடியச் செய்திடும்!

அவர் குறிப்பிட்ட **சிங்கம்** அவரது திருக்குள்ள இருதயமாகும்! தீய வழியில் சென்று யாரையும் 'தாக்குதல்' செய்யாமல், விழிப்புடன் 'அதை' எதிர்த்து நிற்க வேண்டும்!

"மனசாட்சி" என்ற வார்த்தை தேவனுடைய வேதபுத்தகத்தின் புதிய ஏற்பாட்டில் மாத்திரம் 32-தடவைகள் வருகின்றன. அதில் அப்போஸ்தலனாகிய பரிசுத்த பவுல் அடிகளார் மட்டுமே 21 இடங்களில் அதைப் பயன்படுத்துகின்றார்.

"இரண்டு காரியங்கள் எனக்கு மகா ஆச்சரியத்தையும், சொல்லொண்ணா பிரமிப்பையும் உண்டாக்குகின்றது. ஒன்று, நட்சத்திரங்கள் நிறைந்த எனது தலைக்கு மேலாக உள்ள வானமண்டலம்! இரண்டு, நான் செய்வது சரி அல்லது தவறு என்று என்னை உணர்த்திக் காண்பிக்கும் எனது மனசாட்சி!" என்று ஜெர்மன் தேசத்து பக்த ஞானி இம்மானுவேல் காண்ட் கூறியுள்ளார்.

**மனசாட்சி என்றால் என்ன?** ஆங்கிலத்தில் "கான்சையன்ஸ்" என்று கூறப்படும். இந்த வார்த்தை இரண்டு லத்தீன் வார்த்தைகளின் தொகுப்பாகும். அதின் அர்த்தம் என்னவெனில் " மனதின் அந்தரங்கம் முழுமையும் எனக்குத் தெரியும்" என கூறுவதுதான் மனசாட்சி! புதிய ஏற்பாட்டின் இக்காலத்தில் "மனசாட்சி" என்ற வார்த்தை ஒரு நூதனமான வார்த்தை அல்ல. '**ஆதி ஜீவ சுவாசத்தை**' பெற்ற மனிதன் ஒரு பழங்குடி வாழும் மனிதனாயிருந்தாலும், அவனுக்கும் இந்த மனச்சாட்சி உண்டு! அக்காலத்தின் கிரேக்க மக்கள் கூட தங்களது அன்றாட வாழ்க்கையின் சம்பாஷணைகளில் அதை பயன்படுத்தினார்கள்:

*"நீ தீமை செய்யும்போது, உன்னளவில் உணருகின்ற வேதனை" என்றே கிரேக்கர்கள் மனச்சாட்சிக்கு விளக்கம் கொடுத்தனர். எத்தனை பொருத்தமான விளக்கம் இல்லையா?*

*நீ உனது மனசாட்சிக்கு தப்பிச் செல்லவே முடியாது! உனது மனசாட்சியோடுதான் நீ இறுதிவரை வாழ வேண்டும்! நீ உனது மனசாட்சியோடு வாக்குவாதம் செய்யலாம்! அல்லது உனது மனசாட்சியை நீ களங்கப்படுத்தலாம்! அல்லது உனது மனசாட்சியை நீ கடினப்படுத்தலாம்! ....*

"

**ஆனால், நீ உனது மனசாட்சியிடமிருந்து ஒருக்காலும் உன்னை தனிமைப்படுத்தி தப்பிச் செல்ல இயலாது. நீ வலுக்கட்டாயம் செய்து அதை தவறான வழிகளில் செல்ல வழி வகுக்கலாம். ஆனால் மனசாட்சி அங்கேயேதான் இருந்து கொண்டேயிருக்கும்! தேவன் விரும்பாத வழிகளில் தங்கள் மனச்சாட்சியை பயன்படுத்துகிறவர்களின் வாழ்க்கை மகா நிர்ப்பந்தமானது!**

ஒரு நல்ல மனச்சாட்சி ஒளி வீசி பிரகாசிக்கக்கூடிய ஒன்றாகும். அது, தேவனுடைய வசனத்தாலும், தேவ ஆவியானவரின் ஆளுகையாலும் ஒளி வீசுகின்றது! ஆண்டவராகிய இயேசுகிறிஸ்து, மனசாட்சியின் வெளிச்சத்தை, வீட்டினுள்ளே தாராளமாக பிரவேசிக்கச் செய்து கொண்டிருக்கும் ஒரு ஜன்னலுக்கு ஒப்பிட்டுக் கூறினார். "கண்ணானது சரீரத்தின் விளக்காயிருக்கிறது, உன் கண் (மனசாட்சி) தெளிவாயிருந்தால், உன் சரீரம் முழுவதும் வெளிச்சமாயிருக்கும். உன் கண் கெட்டதாயிருந்தால், உன் சரீரம் முழுவதும் இருளாயிருக்கும், இப்படி **உன்னிலுள்ள வெளிச்சம் இருளாயிருந்தால்,** அவ்விருள் எவ்வளவு அதிகமாயிருக்கும்" *(மத் 6:22,23)* என்றே எச்சரித்தார்.

வெளிச்சத்தை தாராளமாக உள்ளே பிரவேசிக்கச் செய்து கொண்டிருக்கும் ஜன்னலைப் போலவே, தேவனுடைய வசனங்களின் வெளிச்சத்தை உங்கள் இருதயத்துக்குள் வருவதற்கு அனுமதி அளிக்க, அளிக்க, உங்கள் மனசாட்சியும், கர்த்தருக்கு மகிமையாக சிறப்புற்று செயல்படும். அநேகருடைய மனசாட்சி, அவர்களை எதுவுமே செய்வதில்லை. ஏனெனில் தங்கள் மனசாட்சியை பிரகாசிக்கப் பண்ணும் தேவனுடைய வசனங்களின் வெளிச்சத்தை அவர்கள் தங்கள் உள்ளத்தினுள் அனுமதிப்பதே இல்லை! அதின் காரணமாக அவர்களின் மனசாட்சியானது அறியாமை, பாவம், பயம் போன்ற இருளால் சூழப்பட்டிருக்கிறது!

இதுபோன்ற மனச்சாட்சியின் இருளால் சூழப்பட்டிருந்த

நிலையில் வாழ்ந்தவள்தான் ஸ்காட்லாந்து தேசத்தின் "**இரத்த மேரி**" ஆவாள். அவளால் கொலையுண்ட கிறிஸ்தவ மக்கள் அநேகர்! அந்த நாட்களில் ஸ்காட்லாந்து தேசத்தில் தேவனுடைய சுவிசேஷத்தை மிகவும் தைரியமாக **ஜாண் நாக்ஸ்** என்ற தேவ பக்தன் அறிவித்து வந்தார். தேசத்தை அரசாண்ட ராணி மேரியின் (இரத்த மேரியின்) எந்த ஒரு மிரட்டலுக்கும் அவர் அஞ்சவில்லை. மாறாக, ஜாண் நாக்ஸின் ஜெபங்களுக்கு, ராணி மேரி அஞ்சி நடுங்கி வந்தாள்!

ஒரு நாள், ஜாண் நாக்ஸை நேருக்கு நேராக சந்தித்த ராணி, "உங்களுடைய மனசாட்சி போல, எனக்கு மனசாட்சி இல்லையே!" என்று கூறினபோது "ராணி அம்மையாரே, தேவனுடைய வார்த்தை என்ற ஒளி உங்களின் மனசாட்சியை சுத்திகரித்து, அதைப் பிரகாசிக்கப் பண்ணாத காரணத்தால், அது அறிவிழந்து இருளாகக் கிடக்கின்றது. அந்த இருளில், எந்த ஒரு அறிவின் ஒளி இல்லையென்றே காண்கின்றேன்" என்று அஞ்சாத நெஞ்சத்தோடு தேவ மனிதன் ஜாண் நாக்ஸ் அவளுக்கு பதில் அளித்தார்! கிறிஸ்தவ பரிசுத்த வாழ்க்கைக்கு 'மனசாட்சி' இன்றியமையாத ஒன்றாகும். அதிலும், தேவனுடைய ஊழியம் செய்வதற்கு அது இன்னும் அதிக முக்கியமானதாகும். தேவ ஊழியனாகிய தீமோத்தேயுவுக்கு "**நீ விசுவாசமும் நல்மனச்சாட்சியும் உடையவனாயிரு**" (1தீமோ.1:18) என்று பரிசுத்த பவுல் அப்போஸ்தலன் கட்டளையிட்டு எழுதினார்.

நாம் இருக்கும் சபைகளில், பக்தி வைராக்கியம் காண்பித்து, விசுவாசத்தை நிரூபித்து காண்பித்திடும் ஆற்றல் நமக்கு இருக்கலாம். அது நல்லதுதான்! ஆனால், நல் மனசாட்சியில்லாமல் நமது விசுவாசத்தை காண்பிப்பது ஒன்றுக்கும் உதவாது! விசுவாசத்திற்கு சாட்சியாக ஜீவித்தார், என்று நாம் மக்களால் பாராட்டுதல் பெற்றும், நம்மிடம் நல்மனசாட்சி இல்லையென்றால், அதினால் யாதும் பயன் கிடையாது! நமது தேவ ஊழியங்கள் ஆசீர்வாதமாயிருப்பதற்கு நல்ல பரிசுத்த மனசாட்சி அதி அத்தியாய அவசியமாகும்!

- கிறிஸ்டோசன்

---

## சபையில் பிரிவினையா? அது, பிசாசுக்குரிய செயல்!

*'ஸ்தல சபையில்' ஸ்திரமாய் நிலைத்திருங்கள்*

"நீங்கள், கோணலும் மாறுபாடுமான சந்ததியின் நடுவிலே குற்றமற்றவர்களும் கபடற்றவர்களும், **தேவனுடைய மாசற்ற பிள்ளைகளுமாயிருக்கும்படி,** எல்லாவற்றையும் முறுமுறுப்பில்லாமலும் தர்க்கிப்பில்லாமலும் செய்யுங்கள்" (பிலிப்பியர் 2:14-16).

*இருள் சூழ்ந்த இவ்வுலகமே நமது பணிக்களம்; ஆத்தும ஆதாய பணியில், நாம் ஒளி வீசும் சுடர்கள்! நமது கைகளிலுள்ள ஜீவ வசனமே நமது ஆயுதம்! நாம் மாசற்றவர்களும், குற்றமற்றவர்களுமாயிருந்தால் இந்த உலகத்தைக் கவர்ந்திழுக்கவும், எழுப்புதலை ஏற்படுத்தவும் முடியும். ஆகவேதான், நாம் எல்லாவற்றையும் முறுமுறுப்பில்லாமலும் தர்க்கிப்பில்லாமலும் செய்ய ஜாக்கிரதை கொண்டிருக்க வேண்டும். குறிப்பாக, ஸ்தல சபையின் அன்பும் ஒற்றுமையும் ஓர் நல்ல குடும்பமாய் பேணிப் பாதுகாக்கப்பட வேண்டும்!*

*'பிரிவினை' சபையின் சாட்சிக்கு வலிமையற்றதாகவே இருக்கும். பிரிவினை உண்டாக்குவது, 'தேவ ராஜ்ஜியத்திற்கு' எத்தகையத் தீங்கை விளைவிக்கக்கூடும் என்பதை நாம் நன்கு அறிந்திருக்க வேண்டும்!* **ஓர் சபை ஐக்கியம் பிளவுபடும்போது ஏற்படும் வேதனையைவிடத் தேவனது இருதயத்துக்கு அதிக வேதனை தருவது வேறெதுவுமில்லை.**

*அதைப் போலவே, ஒரு சபை தலைவருக்கு அவரது ஊழியத்தில் 'பிரிவினை சம்பவிப்பதை' காண்பது, அவருக்கு இருதய வலியாக மட்டுமல்ல, இருதயத் தாக்குதலாகவே (Heart Attack) மாறிவிட வாய்ப்பு உண்டு! சகோதர சகோதரிகளே, நீங்கள் தாபரிக்கும் ஸ்தல சபை மக்களிடையே பிரிவினை என்பதை ஒருபோதும் சிந்திக்க வேண்டாம். நீங்கள் பிரிந்து போவதற்கு ஏதுவாக நூறு காரணங்கள் இருக்கலாம். நீங்கள் பிரிந்து போகக்கூடாது என்பதற்கு ஆதாரமாக 'நல்ல உள்ளம் கொண்டவர்கள்' ஆயிரம் காரணங்களைக் காட்டவும் முடியும்!*

> "**எப்படியானாலும், 'பிரிவினையாகிய' தாக்குதல் திட்டங்களைப் பிசாசானவனே மிதமிஞ்சி வைத்திருக்கிறான். அவன் மகா தந்திரமாகச் சபையை சீரழிக்கும் திட்டங்களைத் தீட்டுவதில் தலை சிறந்தவன். உத்தம தேவ மக்களுக்கும், தியாக ஊழியர்களுக்கும் எதிராகத் தாக்குதல் நடத்த திட்டமிடுவதில் அவனுக்கு நிகராக வேறொருவரும் இல்லை!**

*__மு__ன்னிலையில் பாடுபடும் தேவ தாசர்களின் செயல்பாடுகளை அவன் பல்லாயிரக்கணக்கான ஆண்டுகளாகப் பார்த்து, அவர்களை அழிக்க துடித்து நிற்கிறான். முதல் மனிதன், தனது முதல் பாவத்தைச் செய்யுமுன்பே, சாத்தான் பரலோகத்தில்தான் இருந்தான். தந்திர பார்வையுடன் அவன் தனது தாக்குதல் திட்டங்களையும் செயல்முறைகளையும் அவ்வப்போது மாற்றிக் கொண்டேயிருக்கிறான். இந்தத் தலைமுறையில் அவன் தற்போது*

*பயன்படுத்தி வரும் தந்திர தாக்குதலில் அதிவல்லமையான ஆயுதங்களில் ஒன்று, ஜெப குழுக்களிலும் சபைகளிலும் மேலும் மேலும் பிரிவினைகளையும், பிளவுகளையும் உண்டுபண்ணுதல் ஆகும்! ஏனெனில் தனக்குத்தானே விரோதமாய் பிரிந்திருக்கும் ஒரு வீடு அல்லது ஒரு சபை நிலை நிற்காது என்பது அவனுக்குத் தெரியும் (மத்தேயு 12:25).*

***சா**த்தான் தனக்கு விரோதமாகத் தானே பிரிந்து செயல்படவில்லை என்பதை இயேசு குறிப்பாய் இங்கு உணர்த்துகிறார் (வச.26). "ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு; துண்டுபட்டால் இல்லை வாழ்வு" என்பதை நாம் மறந்துபோனாலும், பிசாசானவன் மறக்கவில்லை என்பதை எச்சரிக்கையுடன் எடுத்துக் கொள்ளுங்கள்!*

**"எவ்வளவுதான் பிசாசின் தந்திரங்கள் இருந்தாலும், முடிவில், லூசிபரின் அதி மோசமான பிரிவினை சதித்திட்டங்களையெல்லாம் ஆவியானவர் நிர்மூலமாக்கி, இயேசு கிறிஸ்துவின் சபை, மகா பெரிய சேனையாய் ஒருங்கிணைந்து எழும்பி நிற்கும் என்பதை என்னோடு நீங்களும் விசுவாசியுங்கள்!**

இந்த வலிமையான தேவனுடைய சித்தத்தை நமது தலைமுறையில் நாம் எதிர்கொண்டு, நிறைவேற்ற வேண்டாமா? ஒவ்வொரு தலைமுறையிலுமுள்ள கிறிஸ்தவர்கள், அந்தந்தத் தலைமுறையிலுள்ள புறஜாதி மக்கள் மத்தியில் "இடறலற்ற வாழ்க்கை" வாழ வேண்டிய பொறுப்பாளிகள் அல்லவா? எனவே, கர்த்தர் என்னை இணைத்திருக்கும் ஐக்கியத்தில், ஸ்தல சபையில் பாடுபடும் உண்மை தாசர்களுடன் **ஒருமைப்பாட்டினைக் காத்துக்கொள்ள,** என்னால் இயன்ற எல்லாவற்றையும் நான் கட்டாயமாகச் செய்ய வேண்டும்!

"இல்லை சகோதரனே, இந்த சபையில் குறையுண்டு" என கூறும் உங்களுக்கு ஓர் இரகசியத்தைச் சொல்ல விரும்புகிறேன்: இந்த உலகில் குறைவற்ற சபை போதகன், முழுமையான இறை ஊழியம் அல்லது ஒரு பிழையும் இல்லாத திருச்சபை என்று சொல்லக்கூடிய தரம் எங்குமே இல்லை!

ஆகவே, 'ஒரு குரங்கைப்போல' மரம் விட்டு மரம் தாவி உங்கள் சபை ஜீவியத்தை வீணாக்க வேண்டாம். நீங்கள் இருக்கிற இடத்தில் நிலைத்திருங்கள்! தேவன் உங்களிடம் செய்யத் சொல்வதைச் செய்யுங்கள்! உங்களது உடன் சகோதர சகோதரிகளிடம் 'மாயமற்ற' அன்பு பாராட்டுங்கள்! உங்கள் ஸ்தல சபையின் தலைவர்களுக்கு கீழ்ப்படிந்திருங்கள்! அதாவது, ஆவிக்குரிய தலைவர்களுக்கு

*'கர்த்தருக்குள்' அடங்கியிருங்கள்! உலர்ந்த எலும்புகள் தேவனுடைய ஆவியைப் பெற்றதும் ஒரு மகா பெரிய சேனையாக எழும்பி நிற்கும் என்பது தேவ வாக்கு! (எசே.37:10).*

" **ஆகவே, பிரிவினையைத் தூண்டும் அந்தகார சக்திகள் அனைத்துக்கும் எதிராக ஒன்றுசேர்ந்து எழுந்து நில்லுங்கள்!**

*உங்களின் ஸ்தல சபை கூடுகையிலுள்ள உடன் சகோதரன் அல்லது உடன் சகோதரி, உங்கள் விரோதி அல்ல!* **நமக்கு ஒரே ஒரு பகைவன்தான் உண்டு, அவன் பெயர் சாத்தான்!** *அவனே, ஆண்டாண்டு காலமாய் தேவ சித்தத்திற்கு மாறாக மக்களது வாழ்வை இருளிலும் பயத்திலும், பகையிலும் பிரிவினையிலும், சிறைப்பிடித்து வைத்திருக்கிறான். வேதம் சொல்லுகிறபடி "நீங்கள் ஒருவரையொருவர் கடித்துப் பட்சித்தீர்களானால் அழிவீர்கள்" (கலா.5:15). இன்றைக்குப் புறஜாதியார் நடுவில், தேவ மகிமையும் தேவ வல்லமையும் வெளிப்பட வேண்டிய அளவு வெளிப்படவில்லையே? ஏனெனில், சபையில் பிரிவினை ஏற்படுத்தும் செயல்பாடுகளைத் தேவன் முத்திரையிட்டு அங்கீகரிக்க விரும்பவில்லை! என்பதே காரணமாகும்.*

*- R.ஸ்டான்லி BYM*

---

## 'சிலுவை பாதை' நடப்பவர்களிடம், கசந்த இதயம் இருப்பதில்லை!

*யாரிடமும் கசப்பில்லாத இருதயம், பரலோக பேரின்பம்*

*இயேசுவை சிலுவையில் அறைவதற்கு முன்பாக 'கசப்பு கலந்த' காடியை அவருக்கு குடிக்கக் கொடுத்தார்கள்!* **அந்த கசப்பை அவர் "ருசி பார்த்தார்!" ஆனால், அவரோ அதை குடிக்கவில்லை!!** *(மத்தேயு 27:34; மாற்கு 15:23). சிலுவையில் அறையப்பட்டு, தன் ஜீவனை விட்ட அந்த கடைசி நேரத்திலும் "அதே கசந்த காடியை" மீண்டுமாய் குடிக்கக் கொடுத்தார்கள்! அவரோ "முடிவுபரியந்தமும்" கசப்பு தனக்குள் வராதபடி 'காடியை குடிக்க' மறுத்துவிட்டார்! (மத்.27:48,50). சிலுவையின் அகோரம் எவ்வளவுதான் இருந்தாலும், இயேசுவோ தன் ஜீவ பாதையை விட்டு சிறிதுகூட விலகவில்லை என்பதை நமக்கு முன் வைக்கப்பட்ட சவாலாகும்!*

*இயேசுவைப் பின்தொடரும் எந்த உத்தம சீஷனும்,* **குருவின் இந்த சிலுவையின் அடிச்சுவட்டைப்** *பின்பற்றியே ஜீவித்திட வேண்டும்! நம்மைச் சூழ 'யாரோ சிலர்' கூடிநின்று, நம்மைக் கசந்து கொள்ளும் சூழ்நிலையில், இந்த உத்தம சீஷனோ அந்தக் கசப்பை ருசித்திடத்தான் வேண்டும்!*

"உத்தம சீஷனாய் நல்லதே செய்து வாழும் என்னை ஏன் கசந்து கொள்கிறார்கள்?" என்ற கேள்வி உங்களுக்குள் எழும்போது, நமக்கு முன்னோடியாய் சிலுவைப்பாதை நடந்து சென்ற இயேசுவின் அடிச்சுவட்டையே கவனித்து பின்பற்றுவோமாக! நம்முடைய குரு 'கசப்பை' ருசிபார்த்திருந்தால்..... நாமும் அவரைப்போலவே 'கசப்பை' ருசி பார்த்திடத்தான் வேண்டும்!

*இந்த வேளையில், நம் குரு காண்பித்த உன்னதமான மாதிரி என்னவெனில், "இயேசு அந்த 'கசப்பை' குடிக்க மறுத்துவிட்டார்!" (மத்.27:34; மாற்கு.15;23). அவர் பொய் குற்றம் சாட்டப்பட்டு, வையப்பட்டு, கள்வரில் ஒருவராய் எண்ணப்பட்டு, காறி உமிழப்பட்டு, ஏற்பட்ட .... அத்தனை நிந்தைகளையும் ஏற்றார்! அவர் மீது அவர்கள் பொழிந்த அத்தனை கசப்பையும் 'ருசித்தார்!' ஆனால்..... அவரோ அதை குடிக்கவில்லை! ஆகவேதான், "அவர் கசந்தவராய்" மாறவில்லை!*

*சிலுவை பாதையில்..... ஒரு நீண்ட நிந்தனையின் மத்தியில், நம் குருவை எப்படியாகிலும் 'கசப்படையச் செய்திட' எடுத்த சாத்தானின் அத்தனை முயற்சியும் பலிக்கவில்லை! தன் ஜீவனை விடப்போகும், கடைசி நேரத்திலாவது 'கசப்பைக்' குடிக்க வைத்திட முயற்சித்த எத்தனமும் பலிக்கவில்லை! (மத்.27:48). அந்தோ..... குருவை கவனமாய் உற்று நோக்கி ஓடாத அநேகம் சீஷர்கள் "கடைசி நேரத்தில் கசப்பைக் குடித்து" இடறி விழுவது மிகுந்த சோகமாகும்!*

*"யாரும் என்னை கசந்திடக்கூடாது! யாரும் என்னை பகைத்திடக் கூடாது!" என்ற உத்திரவாதத்தை, இயேசு தன் சீஷர்களுக்குத் தரவேயில்லை! மாறாக, என்னைப்போலவே "சகல ஜனங்களாலும் பகைக்கப்படுவீர்கள்" என்றே முன்கூட்டியே எச்சரித்தார் (மத் 24:9). ஆனால்,* **நானும் பகையாகி "ஒருவரையொருவர் பகைக்கும்"** *கொடுமை சம்பவித்து 'அன்பு' தணிந்திடாதிருக்கவே தன் சீஷர்களை அப்படி எச்சரித்தார் (வசனம் 10,12,13).* **நாம் கசந்து கொள்ளப்படலாம்.... நாமோ கசந்திடக் கூடாது!** *"தேவ கிருபையினால்" மரணத்தை ருசிபார்த்த இயேசு..... தன் பயபக்தியினிமித்தம், அந்த கசப்படையும் கொடிய ஆத்தும மரணத்தினால் மேற்கொள்ளப்படாமல் இரட்சிக்கப்பட்டார் (எபி 2:19, 5:7). ஒப்பில்லா இந்த மகத்துவ ஜீவியம், சிலுவை வழி* (The Way of Cross) *நடந்து, அவரோடு சிலுவையில் அறையப்பட* (Crucified with Christ) *ஒப்புக்கொடுத்த யாவருக்கும் சொந்தம்!*

*'எம் குருவே, சிலுவை நாதரே' வாழிய நீர், வாழியவே!*

*- T.ரத்தினகுமார்*

## 'வாழ்ந்து' பிரசங்கித்த உத்தமர்!
# ஆண்ட்ருமுரே



**18**-ம் நூற்றாண்டில் மிக வல்லமையான சபை பாஸ்டராகவும், பிரசங்கியாகவும் சுமார் 250 புத்தகங்களை எழுதிய கடும் உழைப்பாளி ஊழியராகத் திகழ்ந்தவர். தன் கல்லூரி படிப்புகளை முடித்த அவர், தன் இளம் 21-ம் வயதில் தென் ஆப்பிரிக்காவின் புறக்கணிக்கப்பட்ட ஓர் ஸ்தலத்திற்கு போதகராய் சென்றார். மிகுந்த அர்ப்பணத்தோடு அரும்பாடுபட்டு போதக ஊழியம் செய்தார். தான் மேற்கொண்டிருந்த வேதாகம கல்லூரி படிப்பின் மூலமாய் பெற்ற விசுவாசம் வெறும் மேலோட்டம் என்பதைக் கண்டு "கிறிஸ்துவின் ஜீவனுக்கு" அதாவது கிறிஸ்துவின் ஜீவியத்தின்படி வாழ மிகத் தீவிரமாய் தன்னை அர்ப்பணித்துக் கொண்டார். தன்னுடைய 28-ம் வயதில் 'எம்மா' என்ற ஆவிக்குரிய சகோதரியை திருமணம் செய்து கொண்டார். தன் கணவருடைய ஊழியத்தில் மிகப் பெரும் ஆதரவாய் திகழ்ந்த அந்த அம்மையார், அவருடைய புத்தக ஊழியத்திற்கு தேவையான அனைத்து உதவிகளையும் செய்தார்!

ஒரு பாஸ்டராய் அவர் ஆற்றிய ஊழியத்தின் ஆரம்பத்தில், தன் ஆவிக்குரிய ஜீவியத்தின் 'வறட்சி நிலையைக்' கண்டார். அந்த வறட்சி நிலைக்கு முக்கிய காரணமாய்: அவருடைய பிரசங்கங்கள் அனைத்தும், அவர் வாழ்ந்த ஸ்தாபனத்தின் வேதாகம கல்லூரி தரத்தின்படி **100%** சரியாக இருந்ததேயல்லாமல் 'கிறிஸ்துவின் ஜீவியமோ' சிறிதுகூட இல்லாதிருந்ததைக் கண்டு அதிகமாய் மனம் வருந்தினார். அந்த நீண்ட வருட மனபாரத்தின் விளைவாய், அவரது சபையில் 1860-ம் ஆண்டு மாபெரும் எழுப்புதல் தோன்றியது. அவருடைய எல்லா கூட்டங்களிலும் "ஜெபமும், மனந்திரும்புதலும், மாற்றங்களும், கிறிஸ்துவின் பிரசன்னத்தால் நிறைந்த பரவசமும்" அவருடைய ஸ்தல சபையில் வழிந்தோடியது மாத்திரம் அல்லாமல், தென் ஆப்பிரிக்காவின் கடைகோடி மட்டும் எழுப்புதல் பரவியது! ஆங்கிலத்திலும், டச் மொழியிலும் அவர் எழுதிய 250-புத்தகங்களும், அநேக கைப் பிரதிகளும் ஆவிக்குரிய ஜீவன் கொண்டதாகவும், மிகுந்த ஆழம் நிறைந்ததாகவும் இருந்தது. அவர் எழுதிய "கிறிஸ்துவுக்குள் நிலைத்திருங்கள், சம்பூரண அர்ப்பண வாழ்க்கை, 'ஜெப கல்வி-கூடத்தில்' கிறிஸ்துவோடு கற்றுக்கொண்டேன்".... இன்னும் இதுபோன்ற உன்னதமான ஆவிக்குரிய புத்தகங்களை எழுதி பல இலட்சம் மக்களை ஆழ்ந்த சத்தியங்களால் ஆசீர்வதித்தார்!

தன்னுடைய 88-ம் வயதில் மரித்த ஆண்ட்ருமுரே அவர்களின் கனிநிறைந்த வாழ்க்கைக்கு ஒரே காரணம், அவர் தேவனோடு அதிகமாய் நெருங்கி வாழ்ந்த வாழ்க்கையே, அந்த இரகசியமாகும். கர்த்தரோடு அவர் கொண்டிருந்த உறவே அவருடைய ஜீவியத்திலும் ஊழியத்திலும் ஆசீர்வாதம் கொண்டு வந்தது!

- நிரூபித்து வாழ்ந்த கிறிஸ்துவின் தாசர்கள்

## திரும்பி வந்த நன்றியுள்ள 'கொக்கு போல' உன் இரட்சகரின் அன்பிற்கு திரும்பு!

அசீஸ் என்ற வாலிபன், வேட்டை துப்பாக்கியால் காயம்பட்ட ஒரு இளம் கொக்கை பார்த்ததும் மனதுருகினான். அதை இராச்சாப்பாட்டுக்கு தயார் பண்ணுவதற்கு பதிலாக அதை எவ்விதமாக காப்பாற்றலாம் என்று ஆழமாக சிந்திக்கத் தொடங்கினான். உடனே அவனுக்கு ஒரு யோசனைபட்டது. ஒரு துணியை கற்பூரத்தைலத்தில் தோய்த்து காலில் காயம்பட்ட பகுதியில் அதை வைத்து இரண்டு குச்சிகளை பாங்காக செதுக்கி அவற்றை காலில் வைத்து நேர்த்தியாக கட்டி அதற்கான மருத்துவ பக்குவங்களை கவனித்தான். அதற்கு ஒரு கூடு செய்து அந்த கூட்டிலே அதை ஆறு மாத காலம் வைத்து காலின் காயத்தை முற்றுமாக ஆற்றி அதை பூரண சுகத்துக்கு வழிநடத்தி விட்டான். கொக்கு, நல்ல பறக்கும் நிலையை எட்டிவிட்டது. ஆனால், அசீஸ் அதைவிட்டுவிட மனமற்றவனாக இருந்தான். அவன் அதை அதிகமாக நேசித்தான்.

கொக்கு தன்னோடு இருக்க வேண்டுமா? அல்லது வேண்டாமா? என்ற முடிவை 'அந்த கொக்கே' தெரிந்து கொள்ளட்டும் என்று தீர்மானித்து, ஒரு நாள் அதை, தனது கண்களில் கண்ணீர் வடிய அதை பறக்க விட்டுவிட்டான். அது ஒரு மரத்தின் உச்சியிலே போய் அமர்ந்தது. அசீஸ் தனது கண்களில் கண்ணீர் வடிய அதை, தான் வைத்த "போரா" என்ற பெயரில் அழைத்தான். அது அப்படியே கீழே எட்டிப்பார்த்தது. என்ன ஆச்சரியம், அடுத்த கணம் அது கீழே பறந்துவந்து தனது ஆபத்தில் உதவி செய்து, தனக்கு மீண்டும் உயிர்கொடுத்த தனது எஜமானனின் தோளில் வந்து அமர்ந்து கொண்டது. அந்த நாளிலிருந்து அது தனது எஜமானனுடனேயே இருந்து வருகின்றது. பகலில் வெளியே பறந்து சென்று மீன்பிடித்து உண்டுவிட்டு, இரவில் வீடு திரும்பிவிடுகின்றது!

ஆனால் நாமோ, நமக்கு ஜீவன்கொடுத்து நம்மை உன்னதங்களிலே பறக்கவிட்ட கர்த்தரை மறந்து நன்றிகெட்ட காட்டுக்கொக்குகளாக அவரது சமூகத்திலிருந்து விலகி ஓடிவிட்டோம். எத்தனை நன்றி கேடு! ஒரு அற்பமாக நாற்றமெடுக்கும் பறவை இனம், தனக்கு அன்பு செய்த ஒரு மனிதனுக்கு தன்னையே சமூலமாக அர்ப்பணம் செய்து தனது கைம்மாறை காட்டும்போது, தேவ சாயலாக படைக்கப்பட்ட வாலிபனே, உனக்காக தமது ஜீவனையே கொடுத்த உனது அன்பு இரட்சகரை விட்டுவிலகி ஓடி, அவருடைய அன்பிற்கு துரோகம் செய்வது சரிதானா?

- சுவிசேஷ மலர்

பணம் அனுப்ப QR பயன்படுத்தவும்

maduraichristianfellowship@indianbk

பரலோக பொக்கிஷங்கள்

**Published and Owned by:**
**Madurai Christian Fellowship, Regd Society,**
***Editor* T.Rathnakumar, Madurai.**
**Printed by SFA Print (P) Ltd., Sivakasi.**